# ‘மாணவர் நடத்தை விதிமுறைகள்’

## மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் மற்றும் பராமரிப்பாளர்களுக்குமான தகவல்.

NSW அரசுப் பள்ளிகளில் அனைவரும் ஒரே சமூகத்தின் அங்கமாக இருந்து, மிக உயர்ந்த கற்றல் தரத்தை  அடைவதற்காக முயற்சிக்கிறார்கள்.

**இந்த நடத்தை விதிமுறை NSW அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பொருந்தும். இணைய நடவடிக்கைகள் உட்பட பள்ளி வளாகத்திற்குள் மற்றும் வளாகத்திற்கு வெளியே நடைபெறும் அனைத்து பள்ளி நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும், பிற மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி பணியாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதையும் இது வழிநடத்துகிறது.**

**கண்ணியமாகவும், பொறுப்புடனும், பாதுகாப்பாகவும்** இருந்து, ஆசிரியர்கள் மற்றும் பள்ளி பணியாளர்கள் வழங்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் நான் இந்த நடத்தை விதிமுறைகளை பின்பற்றுகிறேன்.

---

## அனைவரையும் கண்ணியமாக நடத்துதல்

இதன் பொருள் அனைவரும் தகுந்த விதத்தில் வரவேற்கப்பட்டதாகவும், தங்களில் ஒருவராக உணரும்படி அக்கறையுடனும் புரிதலுடனும் நடந்து கொள்வதாகும்.

**நான்:**

- கண்ணியமாக செவிமடுத்துப் பேசுவேன்
- மற்றவர்களின் கற்றல் செயற்பாட்டில் இடையூறு செய்ய மாட்டேன்
- அனைவரையும் மதித்து, உள்வாங்கி, அவர்களை நியாயமாக நடத்துவேன்
- நமது பள்ளிச் சூழலைப் பேணிப் பாதுகாப்பேன்
- பள்ளிச் சீருடையைச் சரியாகவும் பெருமையுடனும் அணிவேன்.

---

## பொறுப்புடன் நடந்துக்கொள்ளுதல்

இதன் பொருள், அனைவரும் கற்றுக்கொண்டு இணக்கமாகப் பழகும் வகையில் நமது செயற்பாடுகளில் கவனமாக நடந்து கொள்வதாகும்.

**நான்:**

- முடிந்த வரை ஒவ்வொரு நாளும் பள்ளிக்கு வருவேன், பள்ளிக்கும் வகுப்புக்கும் நேரத்திற்கு வந்து சேர்ந்துவிடுவேன், எனக்கு தேவையானவற்றைக் கொண்டுவருவதோடு கற்றல் செயற்பாடுகளுக்குத் தயாராக இருப்பேன்
- பள்ளி மற்றும் வகுப்பு விதிமுறைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றுவேன்
- தொழில்நுட்பத்தை பாதுகாப்பாகவும் கற்றலுக்காகவும் பயன்படுத்துவேன்
- வகுப்பு வேலைகளை செய்து முடிப்பேன், முழு முயற்சியுடன் செயற்படுவேன், மற்றும் தேவையான போது உதவி கேட்பேன்
- எனக்கு இயலுமான வேளைகளில் மற்றவர்களுக்கு உதவுவேன்
- எனது தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு முன்னேற்றம் அடைவதற்கு முயற்சிப்பேன்.

## பாதுகாப்பாக இருத்தல்

இதன் பொருள், நமது பள்ளியில் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் வகையில், உங்களையும் மற்றவர்களையும் கவனித்துக்கொள்வதாகும்.

**நான்:**

- ஆசிரியர்கள் மற்றும் பள்ளிப் பணியாளர்களின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவேன்
- மற்றவர்களின் அந்தரங்கம், தனிப்பட்ட தகவல் மற்றும் உடைமைகளுக்கு மதிப்பளிப்பேன்
- யாரேனும் பாதுகாப்பற்றதாக உணர்ந்தாலோ அல்லது நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டாலோ, குரல் கொடுப்பேன் மற்றும் தயங்காமல் உதவி கேட்பேன்
- வேறுபாடுகளை அமைதியுடனும் நியாயமாகவும் தீர்ப்பேன்.

---

## அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க, நான் பின்வருவனவற்றைக் கட்டாயம் தவிர்ப்பேன்:

- ஒருவரின் தனிப்பட்ட இயல்பு நிலைக்காகவோ அல்லது அவர் என்னிடமிருந்து வேறுபட்டிருப்பதனாலோ, அவரை நியாயமற்ற முறையில் நடத்துதல்
- தொலைபேசிகள், சாதனங்கள், கணினிகள், இணையம் அல்லது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உட்பட, எவர் மீதும் வன்முறையாக நடந்துகொள்வது, காயப்படுத்துவது, அச்சுறுத்துவது, துன்புறுத்துவது அல்லது கொடுமைப்படுத்துவது
- பள்ளிக்கு ஆயுதங்கள், சட்டவிரோத போதைப்பொருட்கள், மதுபானம், வேப், மின்-சிகரெட்டுகள் அல்லது புகையிலை கொண்டு வருதல்.

நான் இவற்றைச் செய்வேனாயின், அனைவரதும் பாதுகாப்பைப் பேணி, கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக, ஊழியர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இதில் தற்காலிகப் இடைநிறுத்தலும் அடங்கும்.

ஆசிரியர்களும் பள்ளி ஊழியர்களும் நான் கற்கவும், நல்ல முடிவுகளை எடுக்கவும், பாதுகாப்பாக இருக்கவும் உதவுகிறார்கள். நமது பாடசாலை, அனைவரையும் ஒன்று சேர்த்து பணியாற்றும் ஒரு சிறந்த கல்வி நிலையமாகத் திகழ்வதற்காக, நான் விதிமெறைகளை பின்பற்றுவேன், மற்றவர்களுக்கு ஆதரவுதவியளிப்பேன், அவர்களின் உரிமைகளை மதிப்பேன், மேலும் எனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வேன்.

☐ ‘மாணவர் நடத்தை விதிமுறைகளை’ நான் பெற்றுக்கொண்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்; அதில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளை நான் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்கிறேன்.

மாணவர் பெயர்: ........................................................................................................................

☐ ‘மாணவர் நடத்தை விதிமுறைகளை’ நான்/நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம்; அதில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளை நாங்கள் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்கிறோம்.

பெற்றோர்/பராமரிப்பாளர் பெயர்: ........................................................................................................

பெற்றோர்/பராமரிப்பாளர் கையொப்பம்: ...................................................................................................

## தொலைபேசி உரைபெயர்பாளர் சேவை

மேலும் தகவல் தேவைப்பட்டால், பள்ளி முதல்வரைத் தொடர்பு கொள்ளவும். உங்கள் விசாரணைக்கு உதவ ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 131 450 என்ற எண்ணில் தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை அழைத்து, உங்கள் மொழியில் ஒரு உரைபெயர்ப்பாளரை இணைக்கும்படி கேட்கவும்.

நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் கூறவும், அவர் உரையாடலுக்கு உதவ ஒரு உரைபெயர்ப்பாளரை இணைப்பார். இந்தச் சேவைக்கு உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.